TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 OCT 1971
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 செப்டம்பர் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 231, 232, 233, 234, 235 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

தருவைக்குளம் அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டடம்

*236. வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி அருகில் தருவைக்குளத்திலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்குப் பள்ளிக் கட்டடம் ஏதேனும் உள்ளதா?

(இ) இல்லையெனில், கட்டடம் எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) பள்ளி நிர்வாகக் குழு வழங்கிய வாடகை இல்லாத கட்டடங்களில் (கொட்டகைகள்) வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(இ) கிராமத்தார்கள் இரண்டு ஏக்கரா நிலம் வழங்கியிருக்கின்றனர். கட்டட வேலைகள் முடிந்த அளவு விரைவாக துவங்கப் படும்.

காட்டுமன்னார் கோயில் அரசு உயர்நிலைப் பெண்கள் பள்ளிக் கட்டடம்

*237. வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, காட்டுமன்னார்கோயில் அரசாங்க உயர்நிலைப் பெண்கள் பள்ளிக் கட்டடத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்தப் பள்ளிக்கு இணை மான்யத்திட்டத்தின் கீழ் ரூ. 25,000 மதிப்புள்ள ஒரு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான கருத்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.